**சுருக்கம்**

வேளாண்மை-உழவர் நலத் துறை - வேளாண் நிதிநிலை அறிக்கை 2022-2023 - 2022-2023-ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும் உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில், ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்குக் கூடுதலாக 20 சதவிகித மானியம் வழங்க ஏதுவாக ரூ.5.00 கோடிக்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (வே.உ 5) துறை**

அரசாணை (2டி) எண். 81 நாள்: 28.04.2022

படிக்க

1. வேளாண் நிதிநிலை அறிக்கை 2022-2023, அறிவிப்பு நாள் 19.03.2022.
2. வேளாண்மை-உழவர் நலத் துறை வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022-2023, மானிய கோரிக்கை எண்.5.
3. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.மாதி1/38192/2022, நாள் 31.03.2022.

---

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட 2022-2023 வேளாண்மை நிதிநிலை அறிவிப்பின்போது, "உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில், ஆதி திராவிட, பழங்குடியின் வகுப்பைச் சார்ந்த சிறு குறு விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள மானியத்துடன், 20 சதவீத கூடுதல் மானியம் ஒதுக்கீடு செய்யப்படும்" என மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

2. அதனைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3. இந்நிலையில், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சிறு குறு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு உயர் மதிப்பு வேளாண் திட்டங்களான ஒன்றிய மாநில நிதிப் பங்கீட்டுத் திட்டங்களில் வழக்கமாக வழங்கப்படும் மானியத் தொகையினை விட 20 சதவீதம் கூடுதல் மானியம் வழங்கும் விதமாக ரூ.5 கோடி நிதிக்கான நிர்வாக மற்றும் நிதி ஒப்புதலை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, ஆய்வுக்குப் பின்னர், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சிறு குறு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில், வழக்கமாக வழங்கப்படும் மானியத் தொகையினை விட 20 சதவீதம் கூடுதல் மானியம் வழங்கும் விதமாக ரூ.5.00 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) நிதிக்கான நிர்வாக மற்றும் நிதி ஒப்புதலை வேளாண்மை இயக்குநருக்கு

வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது. இத்திட்டத்திற்கான செயலாக்க வழிக்காட்டு நெறிமுறைகள் இவ்வாணையுடன் இணைப்பு I-ஆக சேர்க்கப்பட்டுள்ளது. உயர்மதிப்பு வேளாண் திட்டங்களின் பட்டியல் இணைப்பு II-ஆக வழங்கப்பட்டுள்ளது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2401 00 பயிர் வளர்ப்பு -789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – மாநிலச் செலவினங்கள் -AF சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கூடுதல் மானியம் – 311 மானியங்கள் – 01 தனித்திட்ட மானியம். (DP Code: 2401-00-789-AF 31101)

–ரூ.4,00,00,000/-

2401 00 பயிர் வளர்ப்பு - 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JO சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கூடுதல் மானியம் – 311 மானியங்கள் – 01 தனித்திட்ட மானியம். (DP Code: 2401-00-796-JO 31101)

–ரூ.1,00,00,000/-

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா. எண்.7(கூசெ(ஜிகேடி)/நிதி (வேளாண்மை-உழவர்நலன்)/2022, நாள் 25.04.2022-இன் மூலம் இசைவு பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண் உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,சென்னை-5.
தலைமைப் பொறியாளர் (வேபொ), சென்னை-35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA) / (E&RSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18(பெயரில்).
இருப்புத்தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை-9.
நகல்:-
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலரின்
முதுநிலை தனிச்செயலர், தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதித் (வேளாண்மை-உழவர் நலன்/வ(ம)செ.I (ம) II) துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு3) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9
(2 நகல்கள்)
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்புக் கோப்பு/ உதிரிகள்.
கோப்பு எண் 8549/வே.உ.5/2022

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29.4.2022
பிரிவு அலுவலர்

அரசாணை (2டி) எண்.81, வேளாண்மை-உழவர் நலத் (வேஉ 5) துறை, நாள்28.04.2022

## இணைப்பு-I

## திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

திட்டம்: ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சிறு குறு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு உயர் மதிப்பு வேளாண் திட்டங்களான வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை ஆகிய மூன்று துறைகளால் செயல்படுத்தப்படும் ஒன்றிய மாநில நிதி பங்களிப்புத் திட்டங்களில், வழக்கமாக வழங்கப்படும் மானியத் தொகையினை விட 20 சதவீதம் கூடுதல் மானியம் வழங்குதல் பற்றியதாகும்.

நிதி ஒதுக்கீடு : ரூ.5 கோடி.

திட்டச் செயலாக்கம்:-

1. வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை ஆகிய துறைகளில் 2022-23-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் இணைப்பு II-இல் உள்ள உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில் ஆதி திராவிட, பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு குறு விவசாயிகளைக் கண்டறிந்து தனியாக வகைப்படுத்துதல்
2. ஒவ்வொரு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களும் இணைப்பு II-இல் உள்ள உயர் மதிப்பு வேளாண் திட்டங்களிலும் மாவட்ட வாரியாக பயன்பெற உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளின் விவரங்களைக் கணக்கிட்டு அவர்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் மானியத்தொகை கணக்கிடப்படும்.
3. அதன் பின்னர் அத்தொகைக்கு ஈடாக தேவைப்படும் கூடுதல் 20 சதவீதம் மானியப் பங்குத் தொகையினைக் கணக்கிட்டு திட்டவாரியாக அட்டவணை தயாரிக்கப்பட்டு வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு கருத்துருவாக அனுப்பப்படும்.
4. மாவட்டங்களிலிருந்து இவ்வாறு பெறப்படும் கருத்துருக்கள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு வேளாண்மை இயக்குநர் அவர்களால் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள சிறப்பு நிதி ரூ.5 கோடியிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
5. இதே போன்று தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் ஆகிய துறைகளில் உள்ள மாவட்ட அலுவலர்களும் உரிய கருத்துருக்களை தங்கள் துறைத்தலைவர் வாயிலாக வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி தங்களுக்குத் தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்வார்கள்.
6. மூன்று துறைகளுக்குள் தேவைப்படும் நிதிப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்காக வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு உரிய அதிகாரங்களை வழங்கிட அரசின் அனுமதியைக் கோரியுள்ளார்.

<u>திட்டத்தில் பயனடைவதற்கான தகுதி:-</u>

இத்திட்டத்தின் மூலம் பயனடையும் வருவாய்த் துறையால் வழங்கப்படும் ஆதி திராவிட பழங்குடியினருக்கான சான்றிதழும், சிறு, குறு விவசாயிகள் என்ற சான்றிதழும் விவசாயிகள் பெற்றிருக்க வேண்டும்.

<u>திட்ட செயலாக்கத்தினால் விளையும் நன்மைகள்:-</u>

- மாநிலத்திலுள்ள 8.5 இலட்சம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த சிறு குறு விவசாயிகள் பயனடைவர்.
- உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை முழுமையாகப் பயன்படுத்தப்படும். பங்குத் தொகை செலுத்த இயலாததால் மீண்டும் ஒப்படைப்பு செய்யப்படுகிறது என்ற நிலை தவிர்க்கப்படும்.
- உயர் மதிப்பு வேளாண் திட்டங்களின் பலனை பிற விவசாயிகளுக்கு நிகராக ஆதி திராவிட மற்றும் பழங்குடியின சிறு, குறு விவசாயிகளும் அடைவது உறுதி செய்யப்படும். எனவே, அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டு தனிநபர் வருமானமும உயர்த்தப்படுவதுடன் நீடித்த வேளாண்மை செய்திடவும் வாய்ப்பாக அமையும்.
- எனவே, அவர்களின் சமூக அந்தஸ்தும் உயர்ந்து தன்னம்பிக்கை வளரும்.

<u>திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:-</u>

சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆதிதிராவிட, பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் பயன் பெறுவர்.

சி. சமயமூர்த்தி
வேளாண் உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

இ. நிர்மலா
29.4.2022
பிரிவு அலுவலர்

அரசாணை (2டி) எண்.81, வேளாண்மை-உழவர் நலத் (வேஉ 5) துறை, நாள்28.04.2022

## இணைப்பு-II

## இத்திட்டத்தின் கீழ் கூடுதல் மானியம் அளிக்கப்படவுள்ள திட்டங்கள்

| வ. எண். | துறை | திட்டம் | நிதி ஒதுக்கீடு (கோடியில்) |
|---|---|---|---|
| 1. | வேளாண்மைத் துறை (ம) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | ஒருங்கிணைந்த பண்ணையம் (தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்) | ரூ.1.50 |
| 2. | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | பசுமைக்குடில் / நிழல் வலைக்குடில் (தேசிய தோட்டக்கலை இயக்கம், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்) | ரூ.0.70 |
| 3. | வேளாண்மைப் பொறியியல் துறை | 1. வேளாண் இயந்திரமயமாக்கல்<br>2. சூரிய கூடார உலர்த்திகள்<br>3. மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள்<br>4. வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திர சேவை மையம்<br>5. சூரிய சக்தி பம்பு செட்டுகள் | ரூ.2.80 |
| | | மொத்தம் | ரூ.5.00 |

**சி. சமயமூர்த்தி**
**வேளாண் உற்பத்தி ஆணையர்**
மற்றும் அரசுச் செயலாளர்

**/உண்மை நகல்/**

29.4.2022

பிரிவு அலுவலர்